Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

நெடுவினா

1. **ஆதியில் வாழ்ந்த நிலம் :** தமிழன் தொடக்கத்தில் வாழ்ந்த நிலம், குறிஞ்சியாகும். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். எங்கும் இயற்கை அழகு குடிகொண்டிருக்கும் மலைப்பகுதியில் வாழ்ந்த தமிழன் நாளடைவில் முல்லை, மருதம், நெய்தல் போன்ற நிலங்களில் சென்று பரவி வாழத் தொடங்கினான். அப்படி வாழ்வதற்கு முயன்ற தமிழன், தான் இருக்குமிடத்திற்குத் தன்னைச் சூழ அமைந்திருக்கும் இயற்கைச் சூழலைக் கருத்தில் கொண்டே பெயரிடத் தொடங்கினான்.
மலையால் பெயர் பெற்ற ஊர்கள் : பாண்டி நாட்டிலே மதுரைக்கு அருகே ஒரு மலையும், சோழநாட்டிலே ஒரு மலையும், தொண்டை நாட்டிலே ஒரு மலையும் அமைந்துள்ளன. அம்மலைகளைச் சார்ந்து ஊர்கள் அமைந்துள்ளன. எனவே, அவ்வூர் மக்கள் அம்மலைகளை மறவாமல், தம்மூர்களுக்கு முறையே யானை மலை, சுவாமி மலை, தணிகை மலை திருத்தணி எனப் பெயரிட்டுள்ளனர்.
கோடு என்பது மலையைக் குறிக்கும். அத்தகைய கோடு ஒன்று சேலம் மாவட்டத்தில் உள்ளது. அக்கோட்டினை ஒட்டி வாழ்கின்ற மக்கள், தம்மூருக்குத் "திருச்செங்கோடு" என்று பெயரிட்டுள்ளனர். அக்கோடு செந்நிறம் வாய்ந்ததால் அது செங்கோடாயிற்று.
சோலையால் பெயர் பெற்ற ஊர்! : திருக்குற்றால மலை அடிவாரத்தில் கண்கவரும் தண்ணறுஞ்சோலைகள் உள்ளன. அச்சோலைகளுக்கு நடுவே ஓர் களர் உள்ளது. அவ்வூர் மக்கள், தம்மூரின் இயற்கை நலத்தினைக் கண்டு இன்புற்றுத் தம்மூருக்குப் 'பைம்பொழில்' என்று பெயரிட்டனர். அஃது இக்காலத்தில் 'பம்புளி' எனத் திரிந்து வழங்குகிறது.
மரங்களால் பெயர் பெற்ற ஊர்! : கெடில நதிக்குத் தென்கரையில் பாதிரி மரங்கள் நிறைந்த இடம் உள்ளது. அவ்விடத்தில் அம்மரங்கள் சூழ வாழ்ந்த மக்கள் தம்மூருக்குத் "திருப்பாதிரிப்புலியூர்" எனப் பெயரிட்டனர்.
பசுக்களால் பெயர் பெற்ற ஊர்! : முல்லை நிலத்திலே தோன்றும் ஊர்கள் பெரும்பாலும் பாடி என்னும் பெயர் பெறும், திருத்தொண்டராகிய சண்டேசுவரர் பசுக்களை மேய்த்து, ஈசனுக்குப் பூசனை புரிந்த இடம் உள்ளது. அங்குத் தங்கி வாழத் தொடங்கிய மக்கள், தம்மூருக்குத் *திருஆப்பாடி" எனப் பெயரிட்டனர்.
இவ்வாறு இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைய மக்கள், அவ்வவ்விடத்துச் சிறப்பிற்கேற்பப் பெயரிட்டு வழங்கிய திறனை எண்ணி நெஞ்சம் விம்மிதம் கொள்கிறது.

குறுவினா

2. (i) 'கோட்டை' என்னும் சொல் தமிழில் கோடு எனப்படுகிறது; மலையாளத்தில் கோட்ட, கோடு எனப்படுகிறது.
(ii) கன்னடத்தில் கோட்டே, கோண்டே எனவும், தெலுங்கில் கோட்ட எனவும் வழங்கப்படுகிறது.
(iii) துளுவில் கோட்டே என்றும், தோடா மொழியில் குவாட்ட் என்றும் வழங்கப்படுகிறது.
3. தமிழில் (வரை' என்னும் சொல் கோடு, மலை, சிகரம், விவிம்பு, கரை, எல்லை, நுனி எனப் பொருள்களைத் தருகின்றன.

Multiple Choice Question

4. (b) கூற்றும் சரி, விளக்கமும் சரி.
5. (b) கமில் சுவலபில்
6. (a) குறிஞ்சி
7. (a) தமிழ்நாட்டில்
8. (c) பாலகிருஷ்ணன்
9. (d) மலை
10. (b) மலை
11. (c) பாண்டியன்
12. (c) குறிஞ்சி
13. (d) Orology